**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**

**வழக்கு எண்: CC -29/2023**

**வழக்கு சாட்சி :PW2(LW2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வாசுதேவன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | வீரசேகர் | தொழில் | : | |
| கிராமம் | : | கோனகுறிச்சிப்பட்டி | சமயம் | : | |
| தாலுக்கா | | | வயது | : | 11 |

(2 ம் எதிரி ஆஜர். 1 ம் எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act-1969 Section -6(2) on the day 04th day of November 2025.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் - (சாட்சி 11 வயது நிரம்பிய குழந்தை சாட்சி ஆவார். சாட்சி கேட்கும் கேள்விகளை புரிந்து கொண்டு தகுந்த பதில் அளிக்கும் திறனுடையவர் என்பதை கண்டறிவதற்காக பின்வரும் நீதிமன்ற கேள்விகள் கேட்கப்பட்டது.

நீதிமன்ற **கேள்வி** 1) நீ என்ன படிக்கிறாய் ,

**பதில் :** நான் 6 ம் வகுப்பு படிக்கிறேன்.

**கேள்வி** 2) இது என்ன இடம் தெரியுமா ,

**பதில் :** நீதிமன்றம்.

**கேள்வி 3)** எனக்கு தமிழ் எழுத, படிக்க தெரியுமா,

**பதில்** : தெரியும்.

சாட்சி நீதிமன்ற கேள்விகளை புரிந்து கொண்டு தகுந்த பதில் அளித்துள்ளதால் அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

நான் கோனாகுறிச்சிப்பட்டியில் எனது பெ ற்றோருடம் வசித்து வருகிறேன் . எனது அம்மா பெயர் நிரோஷா, எனது அப்பா பெயர் வீரசேகர் ஆவார். எனது அப்பா சிங்கப்பூரில் வேலை பார்த்து வருகிறார். கடந்த 07.10.2021 ம் தேதி நான் மாலை 06.00 மணிக்கு நான் பள்ளிக்கு சென்று விட்டு வீட்டில் இருந்தேன். அச்சமயம் நான் 2 ம் வகுப்பு படித்தேன். நான் எனது வீட்டிற்கு பக்கத்தில் விளையாடி கொண்டிருந்தேன். அப்போது, எனது ஊரைச் சேர்ந்த சதிஷ்குமாரின் அப்பா சக்திவேல் என்பவர் எனது வீட்டிற்கு வந்தார். அவர் எனது அம்மா நிரோஷாவின் தலைமுடியை பிடித்து இழுத்தார்.

அருகில் இருந்த கட்டையை எடுத்து எனது அம்மாவின் தலையில் அடித்தார். சதிஷ்குமாரின் அம்மா கவிதா அங்கு வந்தார். அவர் எனது அம்மாவை தள்ளிவிட்டுநெஞ்சிலும், வயிற்றிலும் மிதித்தார். அப்போது சதிஷ்குமாரின் தாத்தா அங்கு வந்து எனது அம்மாவின் கன்னத்தில் அறைந்தார். அங்கு வந்த சதிஷ்குமாரின் சித்தப்பா பாஸ்கர் என்பவர் எனது அம்மாவை செருப்பால் அடித்தார். அனைவரும் அடித்துவிட்டு ரோட்டில் கல்லை தூக்கி எறிந்தார்கள். எனது அம்மா மயங்கிய நிலையில் இருந்ததால் நான் எனது வேணி அத்தைக்கு போன் செய்து வரச்சொன்னேன். அவர் வந்து 108 ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு எனது அம்மாவை அனுப்பி வைத்தார் . நானும், எனது தங்கையும் எனது அத்தை வீட்டிற்கு சென்றோம். ஆஜர் எதிரியின் பெயர் பாஸ்கர் ஆகும். எதிரிகள் சக்திவேல், கவிதா , சதிஷ்குமாரின் தாத்தா ஆகீயோர்களை எனக்கு பார்த்தால் நன்கு அடையாளம் தெரியும். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எ.த.கு.வி</u>

இல்லை.